[24th January 1972

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவரவர்களே, மாணவியர்கள் கூட இதிலே பங்கேற்பதாகத் தெரிவதால், அவர்கள் கல்லூரிகள் அல்லது பெற்றோர்கள் அனுமதி பெற்றுக்கொண்டுதான் சொல்லவேண்டும் என்ற விதி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கல்லூரிகளின் அனுமதியோடுதான் அவர்கள் அதிலே கலந்துகொள்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆனால் அப்படி விதி இருக்கிறதா என்பதைப்பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: கலந்துகொள்கிற மாணவியர்கள் 18 வயதுக்குட்பட்டவர்களா அல்லது அதற்கு மேலானவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எனக்கு வந்துள்ள விவரப்படி, வயது வந்தவர்கள் தான் இதிலே கலந்து கொள்கிறார்கள் என்றிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: தலைவரவர்களே, "ஃபாஷன்" என்பதற்கு என்ன விளக்கம் என்று தெரியவில்லை. கிருதாவைப் பெரியதாக வைத்திருப்பது நன்றாக இருக்கிறது என்று கிருதா வைத்துக்கொண்டிருந்தவர்கள், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியவுடன், அதை எடுத்துவிட்டிருக்கிறார்கள். "ஃபாஷன்" என்றால் என்ன என்று நிர்ணயிக்கும் விதி ஏதாவது இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எப்படி உடைகளை அணிவது என்று நடக்கும் போட்டியில் உடைகளை விளம்பரப்படுத்தும் அளவுக்குத்தான் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுக் கழகம் அழகுப் போட்டி நடத்தியிருக்கிறது. மற்ற நிறுவனங்கள் நடத்தும் அழகுப் போட்டிகளும் அந்தந்த நிறுவனங்களின் விளம்பரத்துக்காகவே நடத்தப்படுகின்றன.

திரு. டி. சந்தோஷம்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட போட்டிகளை மிக்க பொறுப்பு வாய்ந்த ஸ்தாபனங்கள், ரோட்டரி கிளப், ஓய்.டபுள்யு.சி.ஏ. போன்ற பொறுப்பான ஸ்தாபனங்கள் நடத்துகின்றன. இதுவரை நடந்த போட்டிகளில் ஏதாவது ஆட்சேபகரமான காரியங்கள் நடந்ததாகச் செய்திகள் ஏதாவது வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதுவரை அப்படிப்பட்ட தகவல் எதுவும் இல்லை.

MR. CHAIRMAN: Questions 5 to 9 are postponed.

Veterinary College, Madurai

*10 *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) whether any request has been received in 1970, from the Ramanathapuram District Development Council for starting a Veterinary College at Madurai; and

(*b*) if so, the action taken thereon by the Government?

24th January 1972]

மதுரையில் கால்நடை மருத்துவக் கல்லூரி

திரு. வி. தங்கபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மதுரையில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டுமென்று 1970-ல் இராமநாதபுரம் மாவட்ட அபிவிருத்திக் குழுவிடமிருந்து அரசாங்கத்திற்கு வேண்டுகோள் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அது பற்றி அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) மேலவையில் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவரவர்களே, மதுரை தனிப் பல்கலைக் கழகம் ஆகிவிட்டபடியால், தென் பகுதி மாவட்டங்களுக்கு கால்நடை மருத்துவக் கல்லூரி வேண்டும் என்ற நீண்டநாளைய வேண்டுகோளைப் பரிசிலனை செய்து அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, கோவையில் ஒரு விவசாயப் பல்கலைக் கழகம் ஏற்பட்டிருக்கிறது; அந்த விவசாயப் பல்கலைக் கழகத்தோடு கால்நடை மருத்துவத் துறை வளர்க்கப்பட வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத்தின் தேவைக்கேற்ப கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கப்படக்கூடும்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: இந்த விவசாயப் பல்கலைக் கழகத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைய வேண்டுமென்ற காரணத்தால், சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியைக் கோவைக்கோ அல்லது அதற்கு அருகாமையிலுள்ள ஒரு இடத்துக்கோ மாற்றும் திட்டம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எதுவும் சிறிய அளவில் உள்ளபோது மாற்றுவது எளிது. செடியாக இருக்கும்போதுதான் மாற்றிப் பெயர்த்து நட முடியும். மரத்தைப் பிடுங்கி நடுவது அவ்வளவு பொருத்தமான செயலாகாது, மரமும் பட்டுப்போய்விடலாம்.

திரு. டி. சந்தோஷம்: தலைவரவர்களே, மதுரையிலும் விவசாயப் பல்கலைக் கழகத்தின் ஒரு பிரிவு இயங்கி வருகிறது. பல்கலைக் கழகத்தோடு இணைந்த ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்படும்போது இரண்டு பிரிவுகளாக, கோவையில் ஒரு பிரிவும், மதுரையில் ஒரு பிரிவுமாக அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இடத்துக்கு இடம் இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் கல்லூரி வேண்டுமென்று கேட்ட காரணத்தால், இந்தப் பிரச்சினையை பல்வேறு உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு ஆராய்ந்து 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கல்லூரியைச் சென்னையிலிருந்து வேறு இடத்தில் ஏற்படுத்தலாம் என்ற கருத்து இருந்தது. இந்தக் கால்நடை மருத்துவத் துறையில் ஏறத்தாழ 100 மாணவர்கள் ஆண்டுதோறும் பயின்று பி.வி.எஸ்சி.

@ Printed as Appendix II on pages 63–64.

[24th January 1972

பட்டம் பெற்று வெளிவருகிற நிலை இருக்கிறது. அவர்களில் 100-க்கு 90 பேருக்காவது வேலை தரும் நிலைமை இன்றைக்கு இருக்கிறது. இன்னொரு இடத்தில் புதிதாகத் துவக்க வேண்டுமென்றால், சாதாரணமாக ரூ. 25 லட்சம் அல்லது ரூ. 30 லட்சம் தேவை. வருகிற மாணவர்களைப் பிரித்து இரண்டு இடங்களில் படிக்கச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும். பொருட்செலவுக்கு ஏற்ற பயன் இருக்குமா என்ற ஐயுறவு இருக்கிற காரணத்தால், புதிய கல்லூரி தொடங்கலாம் என்ற நம்பிக்கை இல்லை.

Mahatma Gandhi Tuberculosis Sanatorium, Thanjavur

*11 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) the facilities available at the Mahatma Gandhi Tuberculosis Sanatorium at Thanjavur;

(*b*) whether there is any proposal for its improvements; and

(*c*) if so, the details thereof?

மகாத்மா காந்தி காச நோய் மருத்துவமனை, தஞ்சை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தஞ்சாவூரில் உள்ள மகாத்மா காந்தி காச நோய் மருத்துவமனையில் கிடைக்கும் வசதிகள் யாவை?

(இ) அந்த வசதிகளை மேம்படுத்த செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(உ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) செங்கிப்பட்டி மகாத்மா காந்தி காச நோய் மருத்துவமனை நவீன மருந்துகளைக் கொண்டு காச நோய் மற்றும் அதைச் சார்ந்த நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. பெரிய அறுவை சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன.

(இ) & (உ) ஆம். அரசு நிதி உதவியுடன் கார்டியோ, தொராசிக் அறுவை சிகிச்சைப் பகுதி ஆரம்பிப்பதற்கான ஒரு கோரிக்கை அரசின் ஆய்விலுள்ளது. நிதி தேவைப்படுகிற காரணத்தால், நிதி வசதிக்காகக் காத்திருக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மகாத்மா காந்தி காச நோய் மருத்துவ மனையில் உள்துறை நோயாளிகளாக இருக்க வேண்டியவர்களைப் பதிவு செய்துகொள்ளச் சொல்லுகிறார்கள். பதிவுசெய்து கொண்டு ஒரு ஆண்டு காலத்திற்குப் பிறகும்கூட 'இன்-பேஷன்ட்' ஆக இருக்கிற வசதிகள் கிடைக்காமல், பலர் இறந்துபோன பிறகுதான் அவர்களை மருத்துவ மனையில் சேர்த்துக் கொள்வதாகக் கடிதங்கள் வருகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? பதிவு செய்துகொண்டவர்களை இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளாகவாவது இன்-பேஷன்ட்—ஆகச் சேர்த்துக்கொள்ளும் வசதியை அரசு செய்து கொடுக்குமா?